



திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்குகிற புகைப்படக் கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய கொளத்தூர் தொகுதியில் நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இப்புகைப்படக் கண்காட்சி, நான்கு ஆண்டுகளில் நம்முடைய அரசு தீட்டிய திட்டங்கள் படைத்த சாதனைகளை, புகைப்படம் மற்றும் ஓவியம் வடிவில் கண்முன் நிறுத்தியது. குறிப்பாக மகளிர் விடியல் பயணம் புதுமைப்பெண் தமிழ்ப்புதல்வன் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை போன்ற முற்போக்குத் திட்டங்களின் வெற்றியை புகைப்படக் கண்காட்சியின் வழியே கண்ட போது பெருமிதமும் மகிழ்ச்சியும் கொண்டோம். இந்த சிறப்பான புகைப்படக் கண்காட்சியை ஏற்பாடு செய்த சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்துக்கு என் அன்பும், வாழ்த்தும் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டினார். மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

### பொறியியல் சேர்க்கைகான விண்ணப்பப்பதிவு தொடங்கப்பட்ட

# 10 நாட்களில் 1,69,634 மாணாக்கர்கள் பதிவு செய்துள்ளனர்!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!

சென்னை, மே.17-

தமிழ்நாடு பொறியியற் சேர்க்கைகான இணையதள விணணப்பப் பதிவு 07.05.2025 அன்று தொடங்கிவைக்கப்பட்டது. இது நாள் வரை 1,69,634 மாணாக்கர்கள் விண்ணப்ப பதிவு செய்துள்ளனர் என்று உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:-

07.05.2025 அன்று தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைகான இணையதள மற்றும் விண்ணப்பப்பதிவு தொடங்கப்பட்டது. நேற்று (16.05.2025) மாலை 6.00 மணி நிலவரப்படி 1,69,634 மாணாக்கர்கள் விண்ணப்பப்பதிவு செய்துள்ளனர்.



இதில் 53,624 மாணவர்களும் 48,514 மாணவிகளும் ஆக மொத்தம் 1,02,138 மாணாக்கர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி உள்ளனர்.

மாணாக்கர்கள் www.tneaonline.org என்ற இணையதள முகவரியில் தங்களது பொறியியற் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை 06.06.2025 வரை பதிவு செய்து கொள்ளலாம். மாணாக்கர்களுக்கு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் தமிழ்நாடு முழுவதும் 110 தமிழ்நாடு பொறியியற் மாணாக்கர் சேர்க்கை சேவை மையங்கள் (TFC Centres) நிறுவப்பட்டுள்ளன அந்த சேவை மையங்களை தொடர்பு கொள்ளலாம். மேலும், 18004250110 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவோ அல்லது tneacare@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவோ தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.5.2025) நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் புதிதாக நிறுவப்பட்டுள்ள தானியங்கி பந்து எறியும் இயந்திரத்தின் மூலம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மாணவிகள் டென்னிஸ் விளையாட்டுப் பயிற்சி பெறுவதை பார்வையிட்டார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 10 மற்றும் 11-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற

# சென்னை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.1 லட்சம் பள்ளி கல்வி வளர்ச்சி நிதி!

## மேயர் ஆர்.பிரியா வழங்கினார்!

சென்னை, மே 17

நேற்று (16.05.2025) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி வழங்கிய 14 சென்னை பள்ளிகளுக்கும், 11ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி வழங்கிய லாய்ட்ஸ் சாலை சென்னை மேல்நிலைப்பள்ளிக்கும் பள்ளி கல்வி வளர்ச்சி நிதிக்காக தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலையினை பள்ளிகளின் தலைமையாசிரியர்களிடம் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின்கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப் பள்ளி கள் என மொத்தம் 417 பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சென்னை பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் திறன், ஆசிரியர்களின் கற்பித்தல் திறன், பள்ளியின் உட்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்டவை சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அரசு பொதுத் தேர்வில் 100 % தேர்ச்சி வழங்கிய சென்னை பள்ளிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் பள்ளி கல்வி வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 2024-25-ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் புரசை, ஜி. கோயில் தெருசென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, காமராஜபுரம் சென்னை உயர்நிலைப்பள்ளி, கொடுங்கையூர், காமராஜர் சாலைசென்னை உயர்நிலைப்பள்ளி, கண்ணம்மாபேட்டைசென்னை உயர்நிலைப்பள்ளி, பாடிக்குப்பம் சென்னை உயர்நிலைப் பள்ளி, லாய்ட்ஸ் சாலை சென்னை மேல்நிலைப் பள்ளி, குக்ஸ் சாலை சென்னை உயர்நிலைப் பள்ளி, கீழ்ப்பாக்கம் சென்னை உயர்நிலைப் பள்ளி, கே.பி.தெரு சென்னை உயர்நிலைப் பள்ளி, சேத்துப்பட்டு, மெக்நிக்கோலஸ் சாலை சென்னை உயர்நிலைப் பள்ளி, ரங்கராஜபுரம் சென்னை உயர்நிலைப் பள்ளி, வி.பி.கோயில் தெரு சென்னை உயர்நிலைப் பள்ளி, சூளைமேடு சென்னை மேல்நிலைப் பள்ளி என மொத்தம் 14 சென்னை பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று, பள்ளியின் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

மேலும், 11ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் லாய்ட்ஸ் சாலை சென்னை மேல்நிலைப்பள்ளி 100% தேர்ச்சி பெற்று, பள்ளியின் தலைமையாசிரியருக்கு ரூ.1 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ.விஜயா ராணி, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந. இராமலிங்கம், நிலைக் குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த.விசுவாதன் மற்றும் கல்வி அலுவலர்கள், உதவி கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

